சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் நிலங்களை வாங்கி மனைப்பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்வதில்லை. மொத்தமாக நிலத்தை விற்பனை செய்கிறேன். குடியிருப்பு நிலங்களும், விவசாய நிலங்களும் வாங்கி விற்பனை செய்கிறேன். நிலங்கள் வாங்கி விற்பதில் நிறைய பிரச்சினைகள் இருக்கும் என்றால் பிரச்சினைகள் வராது. இதுவரை நான் வாங்கி விற்பனை செய்த நிலங்களில் பிரச்சினை எதுவும் இல்லை. நிலம் வாங்கி விற்பனை செய்யும் தொழிலை நான் மட்டும் செய்கிறேன். என் நண்பர் யாரும் செய்யவில்லை. பொதுவாக நிலம் வாங்கி விற்பனை செய்வதில் நிறைய சிக்கல்கள் உள்ளன என்றால் இல்லை. என்னுடைய தொழிலுக்கு என்னுடைய முதலீட்டை நான் செய்துள்ளேன். என் தொழிலுக்கு என் மகன் எனக்கு உதவி செய்வார். நான் என்னுடைய கணக்குகளை முறையாக வருமானவரி கணக்கில் காட்டி தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய தொழில் சம்மந்தமாக வரவு செலவு முழுவதும் வங்கி மூலமாகத்தான் நடக்கிறதா என்றால் இல்லை. எனக்கு தணிக்கையாளர் இருக்கிறார். நிலங்கள் வாங்குவது சம்மந்தமாக நான் சட்டக்கருத்துரை பெறும்போது, வழக்கறிஞர் கிரயம் வாங்கலாம் என்று கூறும் நிலங்களை வாங்குவேன். இல்லையென்றால் வாங்கமாட்டேன். சட்டக்கருத்துரையை எழுத்து மூலமாக வாங்குவதில்லை. வாய்வழியாக பெறுவேன். நிலங்களை வாங்குவதற்கும், விற்பனை செய்வதற்கும் எனக்கு நிரந்தரமாக ஆவண எழுத்தர் உள்ளார். அந்த ஆவண எழுத்தர்கள் பெயர் அசோக், அருண் மற்றும் சஞ்சீவி. நிலம் வாங்கி விற்பனை செய்வதில் நிறைய பிரச்சினைகள் உள்ளது என்றும், அதுபோல் எனக்கும் பிரச்சினைகள் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. அவ்வாறு ஏற்படும் பிரச்சினைகளை சமாளிப்பதற்கு எனக்கு ஆள்பலம் உள்ளது என்றால் சரியல்ல. நிலம் வாங்கி விற்பனை செய்வதில் என்னுடைய முதலீடு மட்டும் இல்லை என்றும், எனக்கு பங்குதாரர்கள் உள்ளனர் என்றும் சொன்னால் சரியல்ல. நிலம் வாங்கி விற்பனை செய்வதில் என் மீது உரிமையியல் மற்றும்....

குற்றவியல் வழக்குகள் எதுவும் இல்லை. எனக்கு எதிராக பொய்யாக ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, அதை அவர்களாகவே ரத்து செய்து விட்டனர். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளவர் யாரென்று எனக்கு தெரியாது. நிலம் வாங்கி விற்பனை செய்வது சம்மந்தமாக பழனியம்மாள் என்பவர் என்மீது ஆள்கடத்தல் மற்றும் கொலை முயற்சி வழக்கு தாக்கல் செய்து, அவ்வழக்கு நடந்தது என்றால் நடந்தது. அவ்வழக்கு ரத்தாகிவிட்டது. மேற்சொன்ன பழனியம்மாள் எனக்கு எதிராக தாக்கல் செய்த உரிமையியல் வழக்கு எனக்கு எதிராக முடிந்தது என்றால் சரியல்ல. இவ்வழக்கு பிரச்சினைக்கு பின்னால் செந்தில்பாலாஜி என்ற அமைச்சரின் பின்னணியில் தொடர்பு உள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கு பிரச்சினை சம்மந்தமாக பல பத்திரிக்கைகளில் செய்தி வந்தது என்றால் பொய்யாக வந்தது. 1991ம் வருடத்தில் வாதி குடும்பத்தினர் ஒரு பதிவு செய்யப்பட்ட விடுதலை ஆவணம் ஏற்படுத்தியுள்ள விவரம் எனக்கு தெரியும். மேற்சொன்ன ஆவணத்தை பற்றி இவ்வழக்கிற்கு முன்பு தெரியும் என்றால் நான் கிரயம் வாங்கும்போது தெரியும். அந்த ஆவணத்தில் வாதி பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது. வாதி ராமலிங்கம் என்பவரின் மகன். வாதியை தத்தெடுத்து வளர்த்துள்ளர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதியை தத்தெடுத்ததில் அவரது அம்மாவிற்கு சம்மதம் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதியின் அப்பா 2003ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி வேற்று இனத்து பெண்ணை திருமணம் செய்ததால் அவருக்கு அவர் குடும்பத்தினரிடமிருந்து ஆதரவு இல்லை என்றால் சரியல்ல. ஒன்றாகத்தான் உள்ளனர். அந்த விவரம் எனக்கு தெரியும். வாதிக்கு குடிப்பழக்கம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி திருமணம் செய்துக்கொண்ட பிறகு, அவர் குடும்பத்தினரும், அவரும் தனித்தனியாக இருக்கின்றனர் என்றால் இல்லை. வாதி எனக்கு விற்பனை செய்த 2011ம் வருடத்தில் வாதிக்கு திருமணமாகிவிட்டதா என்றால் அது எனக்கு தெரியாது. கிரயம் சம்மந்தமாக......

வாதி என்னை அணுகும்போது தனியாகத்தான் வந்தார். மதுவிலக்கு பிரிவில் எனக்கு எதிராக வழக்கு உள்ளதா என்றால் *வாதியின் கெட்ட நடத்தை குறித்த கேள்வி என்பதாலும், இவ்வழக்கிற்கு தொடர்பு இல்லை என்பதாலும், மேற்படி கேள்வி தொடர மறுக்கப்படுகிறது.*

வாதியை எந்த பங்களாவில் நான் அடைத்து வைத்திருந்தேன் என்றால் அவரை நான் எந்த பங்களாவிலும் அடைத்து வைத்திருக்கவில்லை. 28.06.2011 தேதியில் பிரபு என்பவர் பெயரில் வாதி ஒரு பொது அதிகார ஆவணம் எழுதி பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணம் ரத்தாகிவிட்டது. இவ்வழக்கு சம்மந்தமான குற்றவியல் வழக்கில் மேற்சொன்ன பிரவு என்பவர் 3ம் எதிரி. வழக்குரையில் 3 இலக்கச் சொத்துக்கள் உள்ள விவரம் எனக்கு தெரியும். வழக்குரையில் உள்ள 1வது அயிட்டச்சொத்து, மண்மங்கலம் கிராமத்தில் உள்ளது என்றால் சரியல்ல. 1வது அயிட்டச்சொத்து இலட்சுமிநாராயணசமுத்திரத்திலும், 2ம் அயிட்ட சொத்து இனாம் கரூர் கிராமத்திலும், 3வது அயிட்டச்சொத்து மண்மங்கலத்திலும் உள்ளது. மண்மங்கலத்தில் உள்ள சொத்து 1 ½ ஏக்கர். மேற்படி சொத்தின் மூல ஆவணம் என் வசம் உள்ளது. மண்மங்கலம் கிராமத்தில் உள்ள சொத்தின் மொத்த விஸ்தீரணம் 2 ¾ ஏக்கர் என்றால் அதில் வாதிக்கு பாதி பாத்தியம். அந்த சொத்தின் சர்வே எண் எனக்கு ஞாபகமில்லை. அந்த நிலம் விவசாய பூமி. அந்த சொத்திற்கு கிணறு உள்ளது. கிணற்றின் மொத்த பரப்பு 15 செண்ட். அந்த கிணற்றில் பாதி 7 ½ செண்ட்டை எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார். அந்த நிலம் பூர்வீகச்சொத்தா என்றால் வாதியின் அப்பா ராமலிங்கம் சுயமாக கிரயம் வாங்கினார். ராமலிங்கம் பெயரில் உள்ள ஆவணம் என் வசம் உள்ளது. அதன் சான்றிட்ட நகல் என் வசம் உள்ளது. அசல் என்னிடம் இல்லை. மண்மங்கலம் கிராமத்திற்கு அருகில் அமைச்சர் செந்தில்பாலாஜி கிராமம் உள்ளது. 2வது அயிட்டச்சொத்து இலட்சுமிநாராயணசமுத்திரம் கிராமத்தில் உள்ளது. அதன் புல எண். 84, 85 மற்றும் 92 ஏ. அந்த சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு......

என்றால் ஏக். 1.26 வாங்கியுள்ளேன். அந்த நிலம் விவசாய பூமி. அந்த பூமியில் லாரி செட் உள்ளது என்றால் இல்லை. அந்த லாரி செட்டிற்கான வாடகையை தற்போது வரை வாதியின் அம்மா வாங்கி வருகிறார் என்றால் சரியல்ல. இலட்சுமிநாராயணசமுத்திரம் கிராம சொத்தை நான் தனியாக கிரயம் வாங்கினேன். அந்த கிரய ஆவணத்தில் கருப்பண்ணன், பாலசுப்பிரமணியன் ஆகியோர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளனர். அவர்கள் இருவரும் பத்திர பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து அங்கு கையெழுத்து போட்டனர். பத்திரபதிவின்போது, இன்னாரென்று நிரூபித்தவர்கள் என்ற இடத்தில் பாலு, நடராஜ் ஆகியோர் கையெழுத்து போட்டனர். மேற்சொன்ன நபர்கள் எனக்கு உறவினர்களா என்றால் இல்லை. வழக்கு 3 வது அயிட்டச்சொத்து இனாம்கரூர் கிராமத்தில் உள்ள சொத்து. அதன் புல எண். 507 மற்றும் 508. அதன் பரப்பளவு 40 செண்ட். தெய்வானையம்மாள் விகித்தார பங்கு போக வாதியின் பங்கை எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார். 2 வது அயிட்டச் சொத்திலும் தெய்வானையம்மாள் விகித்தார பங்கு போக வாதியின் பங்கை எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார். வாதி சொத்துக்களை எனக்கு 08.07.2011 அன்று விற்பனை செய்துக்கொடுத்தார். அன்று வெள்ளிக்கிழமை. அதற்கு ஒருவாரத்திற்கு முன்பு வாதி என்னை சந்தித்தார். வாதி என்னை சனிக்கிழமையன்று சந்தித்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. விற்பனை சம்மந்தமாக வாதி முதலில் என்னிடம் என்ன பேசினார் என்றால் சொத்திற்குரிய விலை பேசினார். வாதி விற்பனை விலை ரூ.2 கோடி சொன்னார். நான் ரூ.2 கோடி கிரயம் வாங்க பேசி முடித்தேன். வாதி என்னிடம் என்னென்ன ஆவணங்களை கொடுத்தார் என்றால் பட்டா, சொத்திற்குரிய செட்டில்மெண்ட் ஆவணம் ஆகியவற்றை கொடுத்தார். வழக்குச்சொத்துக்கள் அனைத்திற்கும் நான் வில்லங்கச்சான்று போட்டு பார்த்தேன். என் பெயரில் வில்லங்கம் போட்டு பார்த்தேன். அந்த வில்லங்கச்சான்றிதழை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் வில்லங்கம் எதுவும்......

போட்டு பார்க்கவில்லை என்றும், அதனால்தான் நான் வில்லங்கச்சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குச்சொத்துக்களை அளந்தீர்களா என்றால் அளந்தேன். வருவாய்த்துறை நில அளவையரை வைத்து அளந்தேன். சர்வேயரை வைத்து அளந்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. சர்வேயரை வைத்து அளந்ததற்கு ஆவணம் எதுவும் தரவில்லை. பேட்டா மட்டும் கட்டினேன். நான் நில அளவையரை வைத்து சொத்தை அளக்கவில்லை என்றும், அதனால்தான் சொத்தை அளந்ததற்கான ஆவணங்கள் என் வசம் இல்லை என்றும், அந்த ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குச்சொத்துக்கள் அனைத்தும், தற்போது வாதியின் அம்மாவுடைய பூரண அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வழக்குச்சொத்துக்களை நான் தற்போது காலியாக வைத்துள்ளேன். வழக்குச்சொத்தில் நான் அத்துமீறி நுழைந்தேன் என வாதியின் அம்மா கொடுத்த புகார் மீது எனக்கு எதிராக கு.எண். 877/2020 என்ற முதல் தகவல் அறிக்கை கரூர் நகர காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கை அப்போதே ரத்து செய்து, முடித்துவிட்டார்கள். அந்த வழக்கு சம்மந்தமாக உயர்நீதிமன்றத்தில் நான் முன்ஜாமீன் பெற்றேன். வழக்குச்சொத்தில் உள்ள வாடகையை வாதியின் அம்மா தற்போது வரை வசூலித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் கிரயத்தொகையை அரசு மருத்துவமனை அருகில் உள்ள மேலக்கரூர் இணைபதிவாளர் அலுவலகத்தில் வைத்து கொடுத்தேன். பணம் கொடுக்கும்போது, வாதியுடன் நான்கு பேர் இருந்தனர். அவர்கள் பார்த்தனர். என் சார்பில் பத்திரத்தில் சாட்சி கையெழுத்திட்டவர்கள் பார்த்தனர். பணத்தை பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியே வைத்து கொடுத்தேன். நான் வாதி வசம் ரூ.2 கோடி பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ரூ.2 கோடியை எவ்வாறு கொடுத்தேன் என்றால் ரூ.1000, ரூ.500 மற்றும் ரூ.100/- தாள்களாக கொடுத்தேன். அதில் ரூ.1000 எவ்வளவு, ரூ.500 எவ்வளவு, ரூ.100 எவ்வளவு

என்று எண்ணிக்கை தெரியுமா என்றால் தெரியாது. கிரயத்தொகை செலுத்திய விவரத்தை என்னுடைய வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேன். அந்த வருமானவரி கணக்கை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். என்னுடைய வருமானவரி கணக்கை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. கிரயத்தொகை ரூ.2 கோடியை நான் வங்கி கணக்கிலிருந்து எடுக்கவில்லை. ரூ.2 கோடி தொகையை எப்படி புரட்டினேன் என்றால் நில விற்பனை செய்யும் தொழில் செய்கிறேன். அதில் வந்த வருமானத்தை வைத்து கொடுத்தேன். குறிப்பாக ரூ.2 கோடி எந்த சொத்தை விற்று கிடைத்த வருமானத்திலிருந்து வந்தது என்று கூற முடியுமா என்றால் அம்மாசாலை, குளத்துப்பாளையம் ஆகிய இடங்களில் நிலம் விற்பனை செய்த பணத்தை வைத்திருந்தேன். 08.07.2011 தேதிக்கு முன்பாக மேற்சொன்ன இடங்களை விற்பனை செய்தேன். எந்த தேதியில் விற்பனை செய்தேன் என்று ஞாபகமில்லை. 2011 ம் வருடம் ஜுன் மாதம் முதல் வாரத்தில் கோயம்புத்தூரிலிருந்து நான் வாதியை கடத்தினேன் என்றால் சரியல்ல. வாதியை கடத்தி, என்னுடைய இடத்தில் அடைத்து வைத்து துன்புறுத்தினேன் என்றால் சரியல்ல. அதற்கு உதவியாக என்னுடைய அடியாட்கள் என்னுடன் இருந்தனர் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்து விற்பனையில் எனக்கு செந்தில்பாலாஜி என்ற அமைச்சர் பின்பலமாக இருந்தார் என்றும், அவருடைய ஆலோசனையிலும், தூண்டுதலிலும் நான் செய்தேன் என்றால் சரியல்ல. வாதியை நான் அடைத்து வைத்து, மது கொடுத்து, புத்தியை பேதழிக்க செய்து நான் கிரயம் வாங்கினேன் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தை விற்பனை செய்வதற்கு வாதிக்கு எந்தவித அவசியமும் இல்லை என்றால் சரியல்ல. 28.06.2011 மற்றும் 29.09.2011 தேதிகளில் பிரபு என்பவர் பெயரில் பவர் பத்திரம் என்ன காரணத்திற்காக எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. இரண்டு பொது அதிகார ஆவணங்களும் என்னுடைய ஆலோசனையின் பேரில் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. வாதி மனம் மாறிவிடுவார் என்ற பயத்தில் பொதுஅதிகார....

ஆவணங்களை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. பின்னிட்டு வாதி என்னுடைய முழுக்கட்டுப்பாட்டில் வந்த காரணத்தினால் பொதுஅதிகார ஆவணங்களை ரத்து செய்துவிட்டு, என் பெயரில் கிரய ஆவணம் எழுதினேன் என்றால் சரியல்ல. வாதியின் நிலத்தை வாங்குவதற்கு யாரும் முன்வராதபோது, எந்த அடிப்படையில் நான் கிரயம் வாங்கினேன் என்றால் நான் நிலம் விற்பனை செய்யும் தொழில் செய்கிறேன். அதனால் கிரயம் வாங்கினேன். வாதி நிலத்தை யாரும் கிரயம் வாங்க முன்வராததற்கு என்ன காரணம் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. கிரயத்தொகை சம்மந்தமாக நான் வாதியிடம் பேரம் பேசவில்லை. என் பெயரில் உள்ள கிரய ஆவணங்களை யார் தயார் செய்தது என்றால் ஆவண எழுத்தர் அசோக் என்பவர் அலுவலகத்தில் உள்ள வழக்கறிஞர் வரைவு செய்தார். கிரய ஆவணத்தை எழுதுவதற்கு ஆவண எழுத்தரை நான் ஏற்பாடு செய்தேன். வாதி, அசோக், நான், வழக்கறிஞர் ஆகியோர் பத்திர எழுத்தர் அலுவலகத்தில் இருந்தோம். 08.07.2011 க்கு இரண்டு நாட்களுக்கு முன்பு பத்திர எழுத்தரை சென்று பார்த்தேன். கிரய ஆவணங்களை தயார் செய்வதற்கு கணிணி பட்டா, விடுதலை பத்திரம் ஆகியவற்றை கொடுத்தேன். பவர் பத்திரம் ரத்து செய்வதற்கு நான்தான் ஏற்பாடு செய்தேன் என்றால் இல்லை. மூன்று கிரய ஆவணங்களும், இரண்டு பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. முதலில் மேலக்கரூர் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றோம். அதற்கடுத்து இரண்டாவதாக கரூர்-2 இணைப்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றோம். பொதுஅதிகார ஆவணத்தை ரத்து செய்துவிட்டு, உடனே கிரய ஆவணம் போட்டேனா என்றால் பொதுஅதிகார ஆவணத்தை அவர்கள் ரத்து செய்தார்கள். அதற்கும், எனக்கும் சம்மதமில்லை. மூன்று கிரய ஆவணங்களும் என்ன காரணத்திற்காக பதிவுத்துறையில் பதிவுக்காக நிறுத்தி வைத்திருந்தார்கள் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவின்போது சட்டப்படியான நடவடிக்கைகள் எதையும், பதித்துறையினர் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற ......

சமயத்தில் பதிவாளர் அலுவலகத்தில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படவில்லை. கிரய ஆவணம் பதிவு செய்த பிறகும், வாதியை என் கட்டுப்பாட்டில் வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. கிரயத்தை பதிவு செய்த பின்னர், உடனடியாக கிரய ஆவணத்தை என் வசம் ஒப்படைக்காத காரணத்தால் வாதியை என் கட்டுப்பாட்டில் வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. வாதி என் கட்டுப்பாட்டிலிருந்து, உயிர்பயத்தில் தப்பித்து வந்தார் என்றால் சரியல்ல. அமைச்சர் செந்தில்பாலாஜி வாதியை தொலைபேசி மூலம் மிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. வாதி உடனடியாக வெளியே வந்து, புகார் செய்தால் தனக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் இரண்டு மாதங்கள் கழித்து புகார் செய்தார் என்றால் சரியல்ல. வாதி கொடுத்த புகாரின் பேரில், எனக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அது நிலுவையில் இருந்து வருகிறது. என்னுடைய மூன்று கிரய ஆவணங்களையும் நீதிமன்றத்தில் டெபாசிட் செய்த பிறகுதான் எனக்கு ஜாமீன் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, என்னுடைய கிரய ஆவணங்களை நான் பெற்றேன் என்றால் சரியல்ல. வாதியின் அம்மா தனது மகன் வாதியை காணவில்லை என புகார் கொடுத்தார் என்றும், அந்த புகாருக்கு சம்மந்தப்பட்ட காவல்நிலையத்தில் எந்தவித முக்கியத்துவமும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. புகார் சம்மந்தப்பட்ட விசாரணைக்கு வாதியை நான்தான் அழைத்து வந்து, வெற்றுத்தாளில் வாதியிடம் கையெழுத்து பெற்றுக்கொடுத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. மூலிமங்கலத்தை சேர்ந்த மோகன்ராஜ் என்பவர் இது சம்மந்தமாக ஒரு புகார் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதியை கடத்தி, அச்சுறுத்தி, நான் வழக்குச்சொத்துக்களை கிரய ஆவணங்கள் எழுதி பெற்றேன் என்றால் சரியல்ல.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.